# ஹற்றன் டிக்ஓயா நகரசபை
## நுவரேலியா மாவட்டம்

---

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 மார்ச் 29 அன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 மார்ச் 07 ஆந் திகதியன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஜுலை 27 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் காரணமாக, கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஹற்றன் டிக்ஓயா பிரதேச சபின் 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை என்னால் வெளியிட முடியாதுள்ளது.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

**கணக்காய்விற்கான சான்றின்மை**

(அ) பதில் கிடைக்கப்பெறாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2011 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் 4 கணக்காய்வு ஐயவினாக்களுக்குப் பதில் வழங்கப்படாதிருந்தது.

(ஆ) கொடுப்பனவு உறுதிச் சான்றுகளைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமை

ரூபா 154,500 கூட்டுத்தொகையுடைய 3 கொடுப்பனவு உறுதிச்சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் கூற்றுக்கள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம் 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 12,418,944 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 3,141,358 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணபடுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 6,243 | 6,405 | 2,608 |
| (ii) | குத்தகை வாடகை | 10,753 | 8,227 | 6,023 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,000 | 1,109 | 170 |
| (iv) | பிற வருவாய் | 33,525 | 22,037 | 29,819 |

#### 2.2.2 முத்திரைக் கட்டணம்

2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 3,792,697 முத்திரைக் கட்டணமாகப் பெறவேண்டியிருந்தது.

### 2.3 வாகனப் பாவனை

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்குரிய 6 வாகனங்களது மைலோமீட்டர்கள் நெடுங்காலமாகச் செயற்படாது இருந்தன. அவற்றைப் பழுதுபார்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) சபைக்குரிய இருவாகனங்களது வருவாய் அனுமதிப்பத்திரங்கள் பெறப்படாதிருந்தன.

(இ) 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் கூறு விலைகளது நியாயபூர்வத் தன்மைக்குரிய அறிக்கை ஒன்றைப் பெறாது ரூபா 216,305 செலவு செய்து 37 ஸ்ரீ 6504 இலக்க டிறக்டர் பழுதுபார்க்கப்பட்டிருந்தது.

(ஈ) ஏறக்குறைய 5 ஆண்டுகளாகப் பாவனைக்குட்படுத்தப்படாதிருக்கும் பல்வேறு அளவுகளிலான 13 டயர்கள் களஞ்சியத்தில் பயனற்றிருந்தன.

## 2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

(அ) 2006 ஜனவரி 25 ஆந் திகதிய அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.2 க்கு முரணாக கூறுவிலைகளைப் போட்டியின் மூலம் பெறாது, மகநெகும உசாத்துனை மற்றும் செயற்திட்டச் சேவைகள் முகாமைத்துவத் தனியார் கம்பனியிடமிருந்து ரூபா 353,435 பெறுமதியான ‘‘கூல்மிக்ஸ்’’ கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) நிதி ஆணைக்குழுவின் செயலாளரது 2006 மார்ச் 07 ஆந் திகதிய 2/2006 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஞாபகார்த்தப் பலகை ஒன்றிற்குச் செலவிடக்கூடிய அதிகூடிய தொகை ரூபா 12,500 ஆகும். எனினும், ரூபா 15,000 வீதப்படி 23 ஞாபகார்த்தப் பலகைகளுக்கு மீளாய்வாண்டில் ரூபா 57,500 கூடுதலாகச் செலவிடப்பட்டிருந்தது.

## 2.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

ஹற்றன் பஸ் தரிப்பிடத்திற்கருகே அமைந்துள்ள நகரசபைக் காணியில் மும்மாடி வர்த்தகக் கூட்டுத்தொகுதியை நிர்மாணிப்பதற்கான மண்பரிசோதனை அறிக்கையைப் பெறுவதற்குத் தனியார் கம்பனி ஒன்றிற்கு ரூபா 161,280 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், காணித் தகராறு காரணமாக அவ்வேலை தடைப்பட்டதால் கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை சிக்கனமற்ற செலவினமாகியது.

## 2.6 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

---

(அ) மாகாண சபை அங்கத்தவர் உதவியின்கீழ் ரூபா 60,850 பெறுமதியான 90 சீமெந்து மூட்டைகள் மற்றும் ரூபா 129,600 பெறுமதியான 120 கூரைத் தகடுகள்

என்பவற்றை பொன்னகர் கொலனியில் உள்ள 30 வறிய குடும்பங்களுக்கு விநியோகிப்பதற்குத் திட்டமிடபட்டபோதும் 16 குடும்பங்களுக்கு மாத்திரமே பொருட்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன. பொருட்களைப் பெற்ற ஒரு குடும்பமேனும் குறைந்த வருவாயைப் பெறுபவர்களாக உறுதி செய்யப்படவில்லை. பொருட்களைப் பெற்றவர்கள் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் 14 குடும்பங்கள் பிற இடங்களில் வசிப்பவர்களாகும்.

(ஆ) மீளாய்வாண்டினது பொருட்கனிப்பு அறிக்கையின் பிரகாரம் டிக்ஓயா நகர மண்டபத்தில் இருந்த ரூபா 42,387 பெறுமதியான பொருட்கள் தொலைந்திருந்த போதும், குறைவுற்றனவற்றின் பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட் வருவாய் மற்றும் செலவினம் உள்ளபடியான வருவாய் மற்றும் செலவினத்துடன் கணக்கிணக்கஞ் செய்யப்படுகையில் 4 வருவாய் விடயங்களில் 19 க்கும் 57 க்கும் இடைப்பட்ட சதவீதத்திலும் 5 செலவின விடயங்களில் 19 க்கும் 87 க்கும் இடைப்பட்ட சதவீதத்திலும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. ஆகவே, வரவு, செலவுத்திட்டம் ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை. என அவதானிக்கப்பட்டது.

## 2.7 செயற்திறன்

--------------------

மீளாய்வாண்டிற்கான செயல்திட்டம் ஒன்று தயாரிக்கப்படவில்லை.

## 2.8 உள்ளகக் கணக்காய்வு

---------------------------------------

நிறுவனத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு இடம்பெறவில்லை.